# தேக்கம் அணைக்கட்டு - ஒரு தொல்லியல் சுற்றுலா நோக்கு

**P Varunrajh**

*Department of History, University of Jaffna.*
*varunpons@yahoo.com*

**ABSTRACT:** *வன்னியில் அருவிகளையும் சிற்றாறுகளையும் மையப்படுத்தியே பண்டையகால குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றதோடு, அவற்றை மறித்து குளங்களும் கட்டப்பட்டன. இக்குளங்களே பின்னர் பிரித்தானியர் ஆட்சியில் மிகப்பெரிய நீர்த்தேக்கங்களாகவும் புனரமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே பறையனாளங்குளப் பிரதேசத்தில் அருவி ஆற்றை மறித்து கட்டப்பட்ட தேக்கம் அணைக்கட்டாகும். இந்த அணைக்கட்டின் வில் வளைவான பிரமாண்டமான தோற்றம், அதன் வடிவமைப்பு, சிறந்த தொழில்நுட்பம், அழகுத்தன்மை என்பன இவற்றைப் புதிதாக பார்வையிடுவோருக்கு ஆச்சரியமளிப்பதாக உள்ளதோடு பல தொல்லியல் வரலாற்றை புதைத்து வைத்துள்ள எமது மூதாதையினரின் மரபுரிமைச் சின்னமாகும். இது இன்று தொல்லியல் சுற்றுலாத்தலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்று இம்மையத்திற்கு சுற்றுலாப்பயணிகள் வருகைதந்து செல்கின்ற போதும் இங்கு சுற்றுலாத்துறைக்கான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாமலே உள்ளது. எனவே, தேக்கம் அணைக்கட்டின் தொல்லியல் வரலாற்றை எடுத்துரைப்பதாகவும் சிறந்த சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பற்றி ஆராய்வதாகவும் இக்கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்விற்கு இவ் அணைக்கட்டு மற்றும் அண்மித்த பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள், இப்பிரதேச மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள், மற்றும் இவ் ஆய்வுடன் தொடர்புடைய இலக்கியச் சான்றுகள் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளேன்.*

**Keywords:** தேக்கம், நாகர்கள், வரலாற்றுக்கு முற்பட்ட காலம், மரபுரிமை அம்சங்கள், சுற்றுலா.

## அறிமுகம்

புராதன இலங்கையின் தலைசிறந்த நீர்ப்பாசன முறையை உலகத்தின் எந்தவொரு புராதன நாகரிகத்துடனும் ஒப்பிடமுடியாது. மலைகளை இணைத்து நீரைச் சேகரித்தல், நடுநிலை பிரகாரம் குளங்களை அமைத்தல் மற்றும் அணைகளைக் கட்டி ஆற்றை திசை திருப்புதல் போன்றன தொடர்பாக எம் மூதாதையினரிடமிருந்த அறிவு தன்னிகரற்றதாகும். எனவே தான் இலங்கைத் தீவெங்கும் காணப்படுகின்ற பண்டைய நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சகல அம்சங்களையும் பாதுகாக்கும் பொறுப்பினை இன்று நீர்ப்பாசன திணைக்களத்தின் ஊடாக தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. அதனடிப்படையில் தற்பொழுது 34,000ற்கும் மேற்பட்ட பாரிய நீர்த்தேக்கங்களும் பெருந்தொகையான கிராமிய குளங்களும் அவற்றோடு இணைந்த கால்வாய்கள், அணைக்கட்டுக்கள், மதகுகள் போன்றனவும் கண்டுபடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட எமது நாட்டிற்குரிய பாரம்பரிய நீர்ப்பாசன அமைப்புக்களை இலங்கைத் தொல்லியல் திணைக்களம் இன்று எமது பாரம்பரிய மூதாதையினர் எமக்காக விட்டுச்சென்ற மரபுரிமைச் சின்னங்களாக அடையாளப்படுத்தி பேணிப்பாதுகாத்து வருகின்றது. அத்துடன் எமது நிகழ்கால, எதிர்கால சந்ததியினரிடமும் அதன் முக்கியத்துவத்தை உணர்த்தி வருகின்றது.

வன்னியில் அருவிகளையும் சிற்றாறுகளையும் மையப்படுத்தியே பண்டையகால குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றதோடு, அவற்றை மறித்து குளங்களும் கட்டப்பட்டன. இக்குளங்களே பின்னர் பிரித்தானியர் ஆட்சியில் மிகப்பெரிய நீர்த்தேக்கங்களாகவும் புனரமைக்கப்பட்டன என்பது பொதுவான அறிஞர்களது



ISBN 978-955-627-128-1

கருத்தாகும். இவற்றுள் ஒன்றே பறையனாளங்குளப் பிரதேசத்தில் அருவியாற்றை மறித்து கட்டப்பட்ட தேக்கம் அணைக்கட்டாகும். இந்த அணைக்கட்டின் வில் வளைவான பிரமாண்டமான தோற்றம், அதன் வடிவமைப்பு, சிறந்த தொழில்நுட்பம், அழகுத்தன்மை என்பன இவற்றைப் புதிதாக பார்வையிடுவோருக்கு ஆச்சரியமளிப்பதாகவே இருக்கிறது. இன்றைய நிலையில் காணப்படும் இவ் அணைக்கட்டை அமைப்பதற்கு சுற்றாடலில் கிடைத்த பாரிய கற்களும் பிற இடங்களிலிருந்து கிடைத்த ஒருசில கற்தூண்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேக்கம் அணையைக் கட்டப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கற்கள் சிறிய மலைகள் போன்று காட்சியளிப்பதனால் இவ்விடத்திற்கு அவற்றைக் கொண்டுவருவதற்கு யானைகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றே எண்ணத்தோன்றுகிறது. உண்மையும் அது தான் என்பது ஆய்வாளர் பலரது கருத்தாகும்.

கி.பி 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வன்னியிலுள்ள நீர்ப்பாசனக்குளங்கள், கால்வாய்கள், கலிங்குகள், அணைக்கட்டுக்கள் என்பன பற்றி ஆய்வினை மேற்கொண்ட ர்.பாக்கர், லூயில் போன்ற அறிஞர்கள் பல பகுதிகளிலும் வரலாற்றுப் பழைமை வாய்ந்த நீர்ப்பாசன கட்டமைப்புக்களை கண்டுபிடித்தனர். அவற்றுள் ஒன்றாகவே பறையனாளங் குளத்தையும் அதற்கருகில் அமைத்துள்ள தேக்கம் அணைக்கட்டையும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக 1881ஆம் ஆண்டு ர்.பாக்கர், என்பவர் பிரித்தானிய அரச மொழியியலாளராகக் கடமையாற்றிய போது பூரணமாக ஆராயப்படாத நிலையில் மன்னார் மாவட்டத்திலுள்ள இரண்டு பாரி நீர்த்தேக்கங்களுக்கு ஒரு பிரதான தேக்கத்திலிருந்து தான் நீர் வருகின்றது எனக்கருதினார். பின்னர் சில வருடங்கள் கழித்து மேற்படி விடயம் தொடர்பாக ஆராய்ந்து தனது அறிக்கை ஊடாக ஊகத்தை உறுதிப்படுத்தினார். அதாவது இத்தேக்கம் அணைக்கட்டிலிருந்தே கட்டுக்கரைக்குளம் (யோதவாவி), அகத்திமுறிப்புக்குளம் ஆகிய குளங்களுக்கு நீர் திசை திருப்பப்படுகின்றது எனவும் இப்பாரிய குளங்களிலிருந்து பல சிறிய குளங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் நீரைப் பெறுகின்றன என்ற உண்மையை வெளிப்படுத்தினர். இவர்களின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து இவ் அணைக்கட்டும் இது அமைந்துள்ள பிரதேசத்தின் பழமையான வரலாறும் வெளிப்பட்டதுடன் அண்மைய ஆய்வாளர்களாலும் இம்மையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலமும் பல புதைந்திருந்த வரலாற்றை வெளிப்படுத்தக் கூடிய நிலையும் தோன்றியது.

இவ் அணைக்கட்டானது இலங்கையிலுள்ள பல்வேறு சுற்றுலா மையங்களுக்கு அண்மையிலும் மத்திய நிலையமாகவும் காணப்படுகின்றது. 2009ஆம் ஆண்டில் யுத்தம் முடிந்த பின்னர் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுலா பயணிகளின் வருகையானது அதிகரித்தே செல்கின்றது. இதன் காரணமாக இன்று இவ் மையம் பலரின் பார்வையைப் பெற்றுக் கொண்டது. இன்று இப்பகுதி மக்கள் காணப்படாத அடர்ந்த காட்டுப்பகுதியாகவே காணப்படுகின்றது. இருப்பினும் அருவியாற்றைக் கடந்து வேட்டையாடச் செல்வோருக்கும் இன்பமயமாகப் பொழுதைக் கழிக்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் இங்கு காணப்படும் அழகான தொங்குபாலமும், தேக்கம் அணைக்கட்டுமே காட்டினுள் காணப்படும் ஒற்றையடிப் பாதையுமே பிரதான நடைபாதையாகக் காணப்படுகின்றது. இந்நிலையானது இங்கு வருபவர்களை கவரக்கூடியதான இயற்கைச் சூழலை இப்பிரதேசம் கொண்டுள்ளது.

இவ் அணைக்கட்டானது நீர்வளம் கொண்ட அருவி ஆற்றை மறித்துக் கட்டப்பட்டமையால் வருடத்தில் கோடை காலத்தில் ஒருசில மாதங்களை தவிர, ஏனைய பெரும்பாலான காலங்களில் அணைக்கட்டிற்கு தெற்கு பக்கமாக வேகமாக நீர் வீழ்ந்து கொண்டே இருக்கும். அவ்வாறு இங்கு நீர் வீழ்கின்ற காட்சி மலைநாட்டில் மலைகளிலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் நீர்வீழ்ச்சிகள் போல இரைச்சலுடனே காணப்படுகின்றது. இவ் அழகான நீர்வீழ்ச்சி வடஇலங்கையில் இங்கே தான் சிறப்பானதாக காணப்படுகின்றது. ஆனால் இவ் நீர்வீழ்ச்சி இங்கு உண்டு என்பதை பலரும் அறிந்திருக்கவில்லை. ஆயினும் காட்டுவள இலாக, நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், அயற்கிராம மக்கள் போன்றோர் அவ்வவ்போது குடும்பசகிதம் வருகை தந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.



ISBN 978-955-627-120-1

அணைக்கட்டுக்கு தெற்குப் புறமாக ஓடும் அருவியாறு தேக்கம் அணைக்கட்டிற்கு மேலும் அழகையும் சிறப்பையும் கொடுப்பதைக் காணலாம். இவ்வணைக்கட்டுடன் இணைந்த சிறிய பாறைகளுக்கு இடையே விழும் நீர் பட்டுத்தெறிப்படைந்து நீர் ஓடும் போது நடுவில் தீவு போல காட்சியளிக்கும் மணற்திட்டுக்களை சுற்றி இரண்டும் பக்கமும் ஓடும் நீரோட்டங்களும் அவற்றின் மத்தியில் காணப்படும் அழகான உயர்ந்த மரங்களும் நீருற்றுக்குள் ஒன்று சேர்ந்து ஆறாக ஓடும். பாதையின் இரு மருங்கிலும் நீண்டு செல்லும் உயர்ந்த மணல் மேடுகளும் அருவியாற்றின் இரு மருங்கிலும் உள்ள பரிமரங்களுக்கு மத்தியில் உள்ள அழகான குழிகளும் பார்ப்போருக்கு அழகான இயற்கைக் காட்சிகளாகவே காணப்படுகின்றன. இவ்வாறு பல சிறப்பம்சங்களைக் கொண்டு காணப்படும் தேக்கம் அணைக்கட்டானது எமது அரும்பெரும் பொக்கிசம் என்றே கூறலாம். எனவே தான் இதன் தொல்லியல் வரலாற்றை மக்களுக்கு எடுத்துக்காட்டி சிறந்த சுற்றுலாத்தலமாகவும் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே இவ்ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்விற்கு இவ் அணைக்கட்டு மற்றும் அண்மித்த பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள், இப்பிரதேச மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள், மற்றும் இவ் ஆய்வுடன் தொடர்புடைய இலக்கியச் சான்றுகள் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளேன்.

**அமைவிடம்**



னக்கட்டு

நீர்ப்பாசன மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றான இத்தேக்கம் அணைக்கட்டு மல்வத்து ஓயாவின் கிளை நதியொன்றினை மறித்து அணையைக்கட்டி நீரைத் தேக்கி திசை திருப்பியமையால் தமிழில் **தேக்கம் அணைக்கட்டு** எனவும் சிங்களத்தில் **தேக்கம் அமுண** எனவும் அழைக்கப்படுகின்றது. இத் தேக்கம் அணைக்கட்டானது 100அ நீளமும், 7அ உயரமும், 3.5அ அகலமும் கொண்டுள்ளது. இது இலங்கையின் மன்னார் மாவட்டத்தின் மடுப்பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆ/131 என்ற கிராம சேவையாளர் பிரிவிற்குள் உள்ளடங்குவதோடு, வவுனியா-மன்னார் மாவட்டத்தின் எல்லையாகக் காணப்படும் பறையனாளங்குளக் கிராமத்திற்கு தென்மேற்கே அமைந்துள்ளது. அதாவது மதவாச்சி - தலைமன்னார் நெடுஞ்சாலையில் பறையனாளங்குளச் சந்தி அல்லது ஆலங்குளம் சந்தியிலிருந்து மதவாச்சி நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் குறிப்பிட்ட தூரத்திலிருந்து வலது பக்கமாக உள்ள கிறவல் பாதையூடாக பயணம் செய்து பின்னர் தேக்கம் அணைக்கட்டின் மூலம் திசை திருப்பப்பட்ட அருவியாற்றிற்கு மேலாக கம்பியினால் தொடுக்கப்பட்ட தொங்குபாலத்தில் பயணித்து எதிர்ப்படும் கிறவல் பாதையில் சுமார் 100அ வரையில் நடந்துசென்றால் இவ்வணைக்கு சென்றுவிடலாம். மேலும் தேக்கம் அணைக்கட்டின் மேலதிக நீர் வெளியேறும் ஆற்றுப்படுக்கையை அடைவதற்கு அங்கு காணப்படும் அதர் வழியாக நடந்து செல்லவேண்டும்.

இவ் அணைக்கட்டை சென்றடைவதற்கு இன்னுமொரு பாரம்பரிய காட்டுவழிப் பாதையையும் காணப்படுகிறது. இப்பாதையானது தேக்கம் அணைக்கட்டிலிருந்து கட்டுக்கரைக் குளத்திற்கு நீரை திசைதிருப்பும் பிரதான வான்கதவு குஞ்சுக்குளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ் வான்கதவு காணப்படுகின்ற கிளையாற்றின் கரையோடு அமைந்துள்ள ஒற்றையடிப்பாதை ஊடாக 2.5 முஅ தூரம் சென்றால் தேக்கத்தை அடையலாம். இத்தேக்கம் பிரதேசத்தை அண்மித்து பிச்சம்பிட்டி, மங்கலம்பிட்டி, நரி இழைச்சான், பன்னவட்டுவான், உப்பன்,



ISBN 978-955-627-128-1

நவிண்தமடு, கள்ளிக்குளம், பெரியமுறிப்பு, குஞ்சுக்குளம் ஆகிய கிராமங்கள் காணப்பட்டன. ஆனால் இன்று குஞ்சுக்குளம் பெரியமுறிப்பு போன்ற கிராமங்களைத் தவிர ஏனைய கிராமங்கள் இன்று மக்கள் குடியிருப்புக்கள் அற்ற காட்டுப்பிரதேசமாகவே காட்சியளிக்கின்றன. இக்கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் விவசாய நடவடிக்கைகளிலும், வேட்டையாடல், நன்னீர் மீன் பிடித்தல் மற்றும் தேன் சேகரித்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

**தேக்கம் அணைக்கட்டின் தொல்லியல் வரலாறு**

தேக்கம் அணைக்கட்டு காணப்படும் பிரதேசமானது வரலாற்று உதயகால மக்களான பெருங்கற்கால மக்கள் பண்பாடு நிலவிய பிரதேசமாக **சுதர்சன் செனிவரட்ன** அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் மோதரகம் ஆற்றின் தென்பகுதி தொடக்கம் வவுனியா செட்டிக்குளம், பறையனாளங்குளம் இவ் அணைக்கட்டு காணப்படும் பரந்த காட்டுச்சூழல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இப்பெருங்கற்கால பண்பாட்டுத் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் இங்கு பெருங்கற்கால சவ அடக்க முறைகளான தாழி அடக்கம், கற்கிடை அடக்க முறைக்கான சான்றுகளும் பெருங்கற்கால செங்கற் கட்டுமான அழிபாடுகள் மட்பாண்ட ஓடுகளும் இவரால் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டு இப் பிரதேசங்கள் பெருங்கற்கால மக்கள் வழிப்பண்பாடு நிலவியதை உறுதிசெய்தார்.

பொதுவாகவே வன்னிப் பிராந்தியங்களிலே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 1970ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுவில் சிரான் தெரணியகல மேற்கொண்ட அகழ்வாய்வின் மூலம் இற்றைக்கு 125000 ஆண்டுகளுக்கு முன்னரே கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்தியிருந்தார். தொடர்ந்து ஜோன் காஸ்வெல் தலைமையில் 1980 காலப்பகுதியில் மாந்தைத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது இற்றைக்கு 28000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குறுணிக்கற்கால மக்கள் வாழ்ந்தமையை உறுதிப்படுத்தியிருந்தார். இவ்வாறான ஆய்வுகள் மூலம் வன்னிப்பிராந்தியமானது இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளை விட காலத்தால் முற்பட்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட பிராந்தியமாகவே விளங்கயிருந்தது என்பது புலனாகின்றது. எனினும் இலங்கைத் தீவெங்கும் அண்மைக்காலம் வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியலாய்வுகள் ஈழத்தில் நாகரிக உருவாக்கத்தை மேற்கொண்டவர்கள் பெருங்கற்கால பண்பாட்டு வழிவந்த மக்கள் கூட்டத்தினரே என உறுதிப்படுத்தினர். அவ்வாறே யாழ்குடாநாடு மற்றும் வன்னிப்பிராந்தியங்களிலும் பெருங்கற்கால மக்களாலேயே நாகரிக உருவாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர்(களபூமி), தீவகம், மாந்தை, பூநகரி, மாமடுவ, செட்டிக்குளம், அண்மையில் கட்டுக்கரை குளத்தின் வான்பாயும் பிரதேசம்(குருவில்) போன்ற மையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெருங்கற்கால பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக குளம், வயல், குடியிருப்பு, இடுகாடு போன்றன விளங்குகின்றன. வன்னிப்பிராந்தியத்தில் பெருங்கற்கால மக்களது கலாசாரத்தை இன்றும் பிரதிபலிப்பாக அமைவது **"குளம்"** என்ற பெயரை பின்னொட்டாகக் கொண்ட கிராமங்கள் ஆகும். அதுமட்டுமன்றி அங்குள்ள பழைமையான குடியிருப்புக்கள், வயல்பரப்பு, இன்றும் காணப்படும் பழமையான குளங்கள், சவஅடக்க மையங்கள், எதிர்பாரதவிதமாக கண்டுபிடிக்கப்படும் பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய சான்றுகள் என்பன பெருநகற்கால மக்களது செல்வாக்கிற்கு உட்பட்ட பிரதேசமாக வன்னி காணப்பட்டதையே எமக்கு எடுத்துக்காட்டுகிறது. **"இலங்கையில் குறுணிக்கற்கால பண்பாட்டை நிறைவு செய்துஇ பெருங்கற்கால பண்பாட்டுக்குரிய குழுத்தலைவர்களாக சமூகத்தினை ஒழுங்குபடுத்தி வாணிபக்குழுக்களை அமைத்தவர்கள் நாக இனத்தவர்ளே"** என்பது சிரான் தெரணியகல உட்பட்ட பெரும்பாலான தொல்லியலாளர்களது கருத்தாகும். இக்கருத்தானது



ISBN 978-955-627-128-1

பெருங்கற்காலத்தில் வாழ்ந்த நாகர்களே வன்னிப்பிராந்தியத்திலும் நாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்டவர்கள் என்பது அண்மைக்காலம் வரையும் நாகர்கள் தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் தெட்டத்தெளிவாக்குகின்றன.

ர்.பாக்கர்இ 19ஆம் நூற்றாண்டில் இவ் அணைக்கட்டை பார்வையிட்டபோது இதன் உருவாக்கம் மிகப்பழமையான காலத்திற்குரியது என்ற கருத்தை முன்வைத்தார். அந்தக் கருத்துக்களை பிரதிபலிப்பதாகவே இவ் அணைக்கட்டால் பயன்பெறும் மக்களிடம் ஐதீகமான நம்பிக்கையொன்று இன்று வரையும் நிவவிவருகின்றது. அதாவது கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட காலங்களில் வன்னி நிலப்பரப்பில் வாழ்ந்த நாக இன மக்களாலேயே கட்டப்பட்டது என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. இவ்வாறே இவ் அணைக்கட்டின் மூலம் நீரைப்பெறும் கட்டுக்கரைக்குளமும் நாகர்கள் இயக்கரை சிறைப்பிடித்து கட்டியதென்ற ஐதீகம் காணப்படுகின்றது. இவ் நம்பிக்கையானது சிலவேளைகளில் உண்மையாக இருக்கலாம். ஏனெனில் அண்மைய தொல்லியலாளர்கள் ''நாகர்களே நீர்ப்பாசன நாகரிகத்தை இலங்கைக்கு அறிமுகம் செய்து வைத்தனர்'' என்ற கருத்தை முன்வைக்கின்றனர். அத்துடன் வன்னிப் பிராந்தியத்தில் பெரியபுளியங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதான அங்குள்ள நான்கு கல்வெட்டுக்களில் வன்னியில் நாகச் சிற்றரசர்களின் ஆட்சியிருந்ததாகக் கூறுவது முன்பொரு காலத்தில் இப் பிரதேசங்கள் நாகர்களின் ஆட்சிக்குட்பட்டதையே புலப்படுத்துகின்றன. அதுமட்டுமன்றி வவுனியாவில் இவ் தேக்கம் அணைக்கட்டிற்கு அருகிலுள்ள செட்டிக்குளம் பிரதேசமானது குளங்கள் நிறைந்த பிரதேசம் என வர்ணிப்பர். இப்பிரதேசத்தில் காணப்படும் குளங்கள் யாவும் நாக மன்னர்களுடைய காலத்திலேயே கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளது. இங்குள்ள குளங்களின் மடைகளின் அருகே ஐந்து தலை நாகச்சின்ன கல்லுருக்கள் இன்றும் காணப்படுகின்றது. இக்குளங்கள் பிற்காலங்களில் யுத்தம்இ அரசியல் காரணங்கள், வறட்சி, நோய்கள், பெருவெள்ளம் போன்றவற்றால் பெரும் அழிவுக்குட்பட்டது. பின்னர் குடியேற்றங்கள் ஏற்பட்ட போது குளங்களைப் புனரமைத்தவர்கள் அக்குளங்களுக்குத் தங்களுடைய பெயர்களை வைத்துள்ளமை தெரியவந்தள்ளது. எனவே மன்னாரில் தேக்கம் அணைக்கட்டு காணப்படும் பிரதேசமானது இவற்றிற்கு அருகாமையில் காணப்படுவதனால் மக்கள் கருதுவதுபோல பெரும்பாலும் இப்பகுதிகளில் காணப்படும் புராதன கால செங்கற் கட்டட சிதைவுகள், அணைக்கட்டில் தெளிவற்ற நிலையில் காணப்படும் பிராமி எழுத்துக்கள், அணைக்கட்டின் கீழ்ப்பகுதியில் காணப்படும் சிறு குழிகள் போன்றன இவ் அணைக்கட்டானது கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பே கட்டப்பட்டிருக்கலாம் என்பதையே கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

இவ்வாறாக நாகர்களால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் இந்த தேக்கம் அணைக்கட்டானது பின்னர் கி.பி 4ஆம் நூற்றாண்டளவில் அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த தாதுசேனன் காலத்தில் மீண்டும் ஒருமுறை கட்டப்பட்டது என்ற வரலாற்றுக் குறிப்பும் உள்ளது. பின்னர் கி.பி 12ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில் ஈழம் முழுவதும் கைப்பற்றி பொலனறுவையை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் இவ்வணைக்கட்டானது மீண்டும் புனரமைக்கப்பட்டு பெருப்பிக்கப்பட்டது. இக்கருத்துக்கு அங்குள்ள மக்கள் மத்தியிலும்இ முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையிலுள்ள இவ்வணைக்கட்டு பற்றிய அறிக்கையும் மேற்குறித்த கருத்தினை ஆதாரப்படுத்துகின்றது. எனினும் திட்டவட்டமாக பிரித்தானியர் காலத்தில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இவ்வணைக்கட்டு கண்டுபிடிக்கப்பட்டுஇ இன்றுள்ள நிலையில் புனரமைக்கப்பட்டுள்ளதை பிரித்தானிய ஆட்சியாளர்களின் ஆவணங்களிலும் புறோகியர்(டீசழாநசை) என்பவரது **புராதன இலங்கை நீர்ப்பாசனவியல்** என்ற நூல் ஆவணத்திலும் இடம்பெற்றுள்ளது.

இவ் அணைக்கட்டின் தொழில்நுட்பம் பற்றி நோக்கும் போது ஆரம்பத்தில் வைரமான மரக்குத்திகளையும், மரப்பலகைகளையும் பயன்படுத்தி அங்குள்ள



ISBN 978-955-627-120-1

இயற்கையான பாறைகளில் குழியை ஏற்படுத்தி மரங்களை அடுக்கி ஒன்றுக்கொன்று முன்று கொடுத்து கட்டப்பட்டுள்ளது. இதனை இன்றும் அங்கு பாறைகளில் காணப்படும் குழிகள் மற்றும் அங்கு காணப்படும் சற்சதுரவடிவிலான மூன்று கலிங்குகளில் அணைக்கட்டின் தொடக்கத்தில் இருக்கும் முதலாவது கலிங்கில் அதன் பழமையை நினைவுபடுத்துவதாக மரங்களை குறுக்காக அடுக்கி ஆற்று நீரினை தடுத்து வைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் இவ் அணைக்கட்டானது செங்கற்களின் துணைகொண்டு புதுப்பிக்கப்பட்டது. இதற்கு ஆதாரமாக இன்று காணப்படும் அணையின் முடிவினைத் தொடர்ந்து காணப்படும் செங்கல் அணை இதன் இரண்டாவது கட்டட தொழில்நுட்ப வளர்ச்சியையே காட்டுகின்றது. இதன் இறுதிக் கட்டுமானமானது பாரிய கருங்கற்களையும் ஒரு சில கற்தூண்களையும்(ஆலயங்களில் காணப்படும்) பயன்படுத்தி கற்களை வரிசை வரிசையாக கற்றளி முறையில் அடுக்கி பின்னர் அடுக்கப்பட்ட கற்களிடையே சுதை எனப்படும் இறுக்கக்கலவைகள் மூலம் கற்களுக்கு இடையிலான இடைவெளிகள் நிரப்பப்பட்டு இறுக்கமாகக் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு தொழில்நுட்பத்தின் படிமுறை வளர்ச்சியிலே இவ் அணை கட்டப்பட்டுள்ளதை கள ஆய்வின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

இன்று காட்சியளிக்கும் இத்தேக்கம் அணைக்கட்டை கட்ட பயன்படுத்தப்பட்டிருக்கும் கற்கள் சிறிய மலைகள் போன்று தோற்றமளிப்பதால் அவற்றை இவ்விடத்திற்கு கொண்டுவருவதற்கு யானைகளைப் பயன்படுத்தியிருக்கலாம் என எண்ணத்தூண்டுகின்றது. அணைக்கட்டின் மேற்பகுதியில் பயன்படுத்தப்பபட்டிருக்கும் கற்களில் ஒருசில நன்கு பொழிந்த கருங்கற்தூண்களும் காணப்படுகின்றன. அவற்றை உற்றுப் பார்க்கின்ற போது அத்தூண்களில் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்து வரிவடிவங்கள் காணப்படுகின்றன. இவ் வரிவடிவங்கள் அணைக்கட்டின் மேல்ப்பகுதியிலே[illegible]லதிக நீர் அணைகட்டின் மேலாக பாய்வதன் காரணத்தினாலும், [illegible] காலங்களில் அணைக்கட்டினை மக்கள் நடைபாதையாக பயன்படுத்தப்பட்டு வருவதனாலும் இன்று எழுத்துக்கள் தேய்வடைந்து தெளிவற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் எழுத்தின் வரிவடிவத்தினை வாசிக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலையேற்பட்டுள்ளது. ஒருவேளை இவ்வெழுத்துக்கள் வாசிக்கப்பட்டிருப்பின் இவ்வணைக்கட்டின் காலம் ஓரளவாவது தெரிந்திருக்கும். ஆயினும் அவை உண்மையில் பிராமி எழுத்துப் பொறித்த கல்வெட்டுக்கள் என்பதை எம்மால் உறுதிபடுத்திக் கொள்ளமுடிகிறது.



பிராமி எழுத்துக்கள்

இதனைத்தவிர சில கற்றூண்களில் கி.பி 10-12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. ஒரு தூணில் ‘‘நந்தி’’ உருவம் போன்ற தோற்றம் காணப்படுகிறது. இன்னொரு தூணில் அலங்கார குறியீடும் காணப்படுகிறது. இங்கே ஐரோப்பியர் ஆட்சியில் கட்டப்பட்ட இவ் அணைக்கட்டில் பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கருங்கற்தூண்களை பயன்படுத்தியிருப்பது ஒரு வியப்பிற்குரியஇ ஆய்வுக்குரிய விடயமாகவே பார்க்க வேண்டும். அதாவது ஐரோப்பிய ஆட்சியில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்கோயிலை இடித்தழித்து அதன் கற்களைக் கொண்டு கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்களை அமைத்தது போல வன்னிப்பிராந்தியத்திலும் வரலாற்று பழைமை வாய்ந்த இந்து, பௌத்த ஆலயங்கள் அழிக்கப்பட்டு அவற்றிலிருந்த கற்களைப் பயன்படுத்தி கோட்டைகளையும் அணைக்கட்டுக்களையும் அமைத்தனர் என கருதலாம். குறிப்பாக அக்காலத்தில் வன்னிப்பிராந்தியத்தில் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயமே பெரிதாகக்





ISBN 978-955-627-120-1

காணப்பட்டது. அவ்வாலயத்தை இடித்தே மன்னார்க் கோட்டை, யாழ்ப்பாணம் ஊர்காவற்துறைக் கோட்டை என்பன கட்டப்பட்டன என ஐரோப்பிய ஆவணங்கள் கூறுகின்றன. ஆரம்பகாலங்களில் மாதோட்டத்திலுள்ள பாலாவி தீர்த்த கேணிக்கு அருவியாறே நீர் வழங்கியது. ஆதுமட்டுமன்றி மாதோட்டத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடையிலான நதிப்போக்குவரத்து பாதையாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ் நதிப்போக்குவரத்து கட்டுக்கரைக்குளம் பிரித்தானியர் காலத்தில் வி'தரிக்கப்பட்டதும் துண்டிக்கப்பட்டதாக வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. எனவே நதிப்போக்குவரத்துஇ தரைவழிப்பாதை என்பவற்றினூடாக போர்த்துக்கேயர்களால் திருக்கேதீஸ்வரத்திலிருந்து தேவாலயங்கள் கட்டுவதற்காக இத்தேக்கம் அணைக்கட்டு உள்ள அயற்சூழலிற்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம். பின்னர் இக்கற்களை பிரித்தானிய ஆட்சியாளர்கள் இவ் அணைக்கட்டை கட்டப்பயன்படுத்தியிருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது. இக்கதை மரபே அப்பிரதேச மக்களிடையே இன்றும் நிலவுகின்றது.

மேலும் இத் தேக்கம் அணைக்கட்டு காணப்படும் பிரதேசத்தின் ஊடாக ஆரம்பகாலங்களில் மாதோட்டம் துறைமுக நகரத்திலிருந்து அநுராதபுரம் நகரம் வரை செல்வதற்கான தரைவழிப்பாதை காணப்பட்டுள்ளதை கள ஆய்வின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. அந்தவகையில் மாந்தை துறைமுகத்திலிருந்து திருக்கேதீஸ்வரம், மாளியபிட்டி, முருங்கன், கற்கிடந்தலுகுளம், தேக்கம்(பறையனாயங்குளம்), செட்டிக்குளம், தந்திரிமலை, குதிரை கட்டியவெளி, மகாவிலாச்சியா என்ற இடங்கள் ஊடாக மல்வத்துஓயா நதிக்கரை வழியாக அநுராதபுர நகரை சென்றடைவதற்கான வழிகாணப்பட்டது. மாந்தை துறைமுகத்துக்கும் அநுராதபுரத்துக்கும் இடையில் அமைந்திருந்த இராஜபாதையின் ஊடாக அரச பரிவாரங்கள்இ வணிகசாத்துக்கள்இ துறவிகள்இ தேச சஞ்சாரிகள் போன்ற தரப்பினர் பயணித்த அந்த காலம் மகோன்னதமானதாகும். மேலும் படையெடுப்பாளர்களின் ஊடுருவல் வழியாகவும் மாந்தை துறைமுகத்திலிருந்து உள்நாடு நோக்கிய வணிகர்களின் வழியாகவும் இந்த அரச பெருந்தெரு பயன்படுத்தப்பட்டது. இத்தெரு நெடுகாலும் இடையிடையே காவல் அரண்களையும் இடைத்தங்கள் முகாம்களையும் கொண்டிருந்ததை வரலாற்றில் அறியமுடிகின்றது. குறிப்பாக 1967ஆம் ஆண்டு **விமலாபேக்லி** மாந்தை பிரதேசத்தில் மேலாய்வினை மேற்கொண்ட போது மாந்தைக்கும் அநுராதபுரத்திற்கும் இடையில் பண்டைய காலம் தொட்டு வர்த்தகப் போக்குவரத்து நெடுங்காலமாக இடம்பெற்றதை மட்பாண்டங்களின் துணைகொண்டு விளாத்திக்குளம், கொல்கின்மருதமடு இராசமடு. மாணிக்கப்பிட்டி , பவளக்காளி மருதமடு ஆகிய கிராமங்கள் இரு பகுதிகளுக்கு இடையிலான இடைத்தங்கல் முகமாகக் காணப்பட்டதை எடுத்துக்காட்டினார். மேலும் இவ் அரச வீதியில் சில இந்துஇ பௌத்த வழிபாட்டுத் தலங்களும் இருந்துள்ளன. அத்தகைய வழிபாட்டு மையங்களில் மாளிகைப்பிட்டிஇ கற்கிடந்தகுளம்இ புளியடிஇறக்கம் போன்ற மையங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இன்றும் இவற்றிற்கான தொல்லியல் அழிபாட்டு எச்சங்கள் சான்றுபகர்கின்றன. இவ்வாறாக தேக்கம் அணைக்கட்டு பிரதேசமானது மாந்தை-அநுராதபுரம் போக்குவரத்துப பாதையின் மையமாகக் காணப்பட்டமையினால் ஆரம்பகால வரலாற்றில் உன்னதமாக முக்கியத்துவத்தை பெற்றிருக்கலாம்.

தேக்கம் அணைக்கட்டுப் பகுதியானது போக்குவரத்துப் பாதையின் மையமாக மட்டுமன்றி இயற்கையாகவே யானைகளைக் கொண்ட காடாகவும் விளங்கியமையால் இப் பகுதிகளில் யானைகள் பிடிக்கப்பட்டு யானை வர்த்தகம் நடைபெறும் மையமாகவும் விளங்கியிருந்தது. இந்த தேக்கம் அணைக்கட்டு காணப்படுகின்ற அருவியாற்றின் இரு மருங்கிலுமுள்ள பாரிய மரங்களுக்கு மத்தியிலுள்ள அழகான குழிகள் பண்டைய காலத்தில் யானைகள் சிறைப்பிடிக்கப்பட்ட இடங்களாகவும்இ அதனருகேயுள்ள மேட்டுப் பகுதியிலுள்ள கட்டட அழிபாடுகள் உள்ள இடங்கள் வெளிநாட்டு யானை வர்த்தகம் நடைபெற்ற இடங்களாகவும் காணப்பட்டதெனக் கூறும் வரலாற்று மரபு காணப்படுகின்றது. இங்கு இடம்பெற்ற யானை வர்த்தகம் பற்றி அண்மையில் கலைக்கேசரியில் கட்டுரையொன்று திரு.



ISBN 978-955-627-120-1

பஸ்ரியம்பிள்ளை ஜோன்சன் என்பவரால் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். அவர் கூறியிருக்கும் கருத்துக்கள் உண்மை என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

குறிப்பாக இலங்கையின் பொலனறுவை காலத்து மன்னனான 1ஆம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் வடஇலங்கையில் யானை வர்த்தகம் சிறப்பாக இடம்பெற்றதுடன், தமிழகத்தில் திருவாலங்காடு, பல்லவராயன்பேட்டை ஆகிய இடங்களில் கிடைத்த கி.பி 12ஆம் நூற்றாண்டுக்குரிய இரண்டாம் இராஜாதிராஜ சோழன் காலக் கல்வெட்டுக்கள் சோழப்படைவீர்கள் வடஇலங்கை மீது படையெடுத்து அங்குள்ள மன்னார் பட்டினம், மாதோட்டம், புலச்சேரி, வலிகாமம்(இது மன்னாருக்கு தெற்கே 5மைல் தொலைவில் உள்ள இடம்)இ ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் நின்ற யானைகளையும், படைவீரர்களையும் சிறைப்பிடித்து தமிழகம் கொண்டு சென்றதாகக் கூறுகின்றன. இங்கே ஊர்காவற்துறையை தவிர ஏனைய இடங்கள் எல்லாம் தேக்கம் அணைக்கட்டினை அண்மித்து அமைந்துள்ள இடங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக பத்திரிகையாளர் ஜோன்சன் பஸ்ரியம்பிள்ளை தேக்கம் அணைக்கட்டுப் பகுதி **யாழ்ப்பாண இராசதானி, ஐரோப்பியர் மற்றும் வன்னிச் சிற்றரசர்களின்** ஆட்சியில் யானை வர்த்தகம் இடம் பெற்றுள்ள பிரதேசம் என அடையாளப்படுத்தியிருப்பது சரியென்றே கூறலாம். ஏனெனில் யானை பிடிப்பதில் தேர்ச்சி பெற்ற **மொத்தக்கர், பணிக்கர், தனையர்** என்போரின் வாரிசுகள் மாதோட்டம்இ முசலிப் பிரதேசத்தில் இன்றும் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் தேக்கம் அணைக்கட்டுப் பிரதேசமானது பிரதான போக்குவரத்து மையமாகவும், வர்த்தக மையமாகவும் விளங்கியமையால் இப் பிரதேசங்களை அண்மித்த பகுதிகளில் இந்துமதம் சார் வழிபாடுகளும் பௌத்தம் மத சார் வழிபாடுகள் தோன்ற காரணமாகியது. இந்தமையத்தின் ஊடாக பல்லவ, சோழ, பாண்டிய மன்னர்களது படையெடுப்பும் வர்த்தகர்கள் ஒன்று கூடும் பிரதேசமாக விளங்கியமையால் அவர்களாலேயே நிச்சயமாக இவ் வழிபாட்டு முறைகள் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். தேக்கத்திற்கு தெற்குப் பகுதியிலுள்ள புளியடி இறக்கம் என்ற இடத்தில் கண்ணகி வழிபாட்டு ஆலயமும் கற்கடந்த குளம், பெரியமுறிப்பு, மாந்தை ஆகிய பிரதேசங்கள் தேக்கத்தின் வடக்காக மிக அண்மையில் அமைந்துள்ளன. இங்கு பௌத்தமத எச்சங்கள் கண்டுபிடிக்கபட்டுள்ளன. வட இலங்கையிலே தமிழர்களும் ஆரம்பத்தில் பௌத்தர்களாகக் காணப்பட்டதோடு இப் பகுதிகளில் தமிழ்ப் பௌத்தமானது தமிழகத் தொடர்பால் மாந்தைத் துறைமுகம் ஊடாக அநுராதபுரம் பரவியதெனலாம். இப் பௌத்த மதத்தை பரப்புவதில் தமிழ் வணிகர்களும் பங்காற்றினர் என்பதை அநுராதபுரம், பெரிய புளியங்குளம், அம்பாறை ஆகிய இடங்களில் கிடைத்த கி.மு 3ஆம்,2ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமிக்கல் வெட்டுக்கள் தமிழ் வர்த்தகர்கள் பௌத்த சங்கத்திற்கு கொடுத்த தானங்கள் பற்றியும் கூறுகின்றன. இதனூடாக இலங்கையில் பௌத்த மதப் பரம்பலுக்கு தமிழ் வர்த்தகர்களும் பங்காற்றியுள்ளமை தெரியவருகின்றது. மேற்குறித்த இடங்களில் கண்டெடுக்கப்பட்ட புத்தரது திருவுருவங்கள் ஆந்திரக்கலை மரபை அடியொற்றியதாகக் காணப்படுகின்றது. இது ஆந்திர - ஈழ வர்த்தக உறவின் விளைவாகவே இப் பகுதிகளில் பரவியுள்ளமை தெளிவாகின்றது.

அவ்வாறே புளியடி இறக்கம் என்ற காட்டுப் பகுதியில் வைத்து வழிபடப்பட்ட கி.பி 5ஆம் 6ஆம் நூற்றாண்டுக்குரிய இந்துத் தெய்வ சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் கண்ணகி உருவம்இ நாகசின்னம், பிள்ளையார், சிவலிங்கம் போன்ற கடவுளர்கள் உள்ளடங்குகின்றன. இந்தப் பழமையான சிலைகள் வேட்டையாடச் செல்பவர்களால் கண்டெடுக்கப்பட்டு தேக்கம் அணைக்கட்டிலிருந்து 2 1.∴2 கிலோ மீற்றர் மேற்கேயுள்ள ர்நயன ஞரடரஉந(குஞ்சுக்குளம்) என்ற இடத்திலுள்ள சிறிய பத்தினி அம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் கண்ணகி சிலையின் உருவத்திற்கும் இசுறுமுனிய காதலர் சிற்பத்திற்கும் இடையேயான கலைப்பாணி ஒற்றுமைத்தன்மை கொண்டதாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக இசுறுமுனிய காதலர் சிற்பம் பல்லவர் காலக் கலைப் பாணியைப் பின்பற்றி வடிவமைக்கப்பட்டதாகும். அதேபோல இக் கண்ணகி சிலையும் அங்குள்ள மக்கள்



ISBN 978-955-627-128-1

மத்தியில் இது கி.பி 6ஆம், 7ஆம் நூற்றாண்டிற்குரிய சிலையாக கருதலாம். பல்லவ ஆட்சியாளர்களது படையெடுப்பிற்கும் பல்லவர்கால வணிககணங்களுக்குரிய போக்குவரத்து மற்றும் வர்த்தக மையமாகக் காணப்பட்ட தேக்கம் அணைக்கட்டுப் பிரதேசத்தில் அவர்களது பண்பாட்டுச் செல்வாக்குகள் ஏற்பட்டிருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது.

**தேக்கத்தினை சிறந்த சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள்**

தென்னாசிய நாடுகளின் ஒன்றாகக் காணப்படும் இலங்கையானது இந்துசமுத்திரத்தின் மத்தியிலும் கிழக்கு - மேற்கு வர்த்தப் பாதையின் மையத்திலும் அமைந்திருப்பதோடு அழகான இயற்கையான பல்லுருவ அம்சங்களைக் கொண்டு கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து பிரித்தானியர் ஆட்சிவரைக்கும் தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியத்தையும் கொண்ட நாடாகக் காணப்படுகின்றது. இதனால் இலங்கை சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான வளங்களையும் அதிகளவில் கொண்டுள்ளதனால் ஏனைய நாடுகளைப்போல சுற்றுலாக்கைத்தொழிலில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. சமகாலத்தில் யுத்தம் முடிவடைந்ததன் காரணத்தினால் இலங்கையில் தெற்கு நோக்கி வருகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வட இலங்கை நோக்கியும் அதிகளவில் வரத்தொடங்கினர். இதனால் வட இலங்கையிலும் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்து வருகின்றது.

இன்று வன்னிப்பிராந்தியமும் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ளன. குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை அதிகம் ஈர்ப்பவையாக இயற்கை மரபுரிமை அம்சங்கள் காணப்படுகின்றன. வன்னிப்பிராந்தியத்தின் தரைத்தோற்றம், இயற்கை கனிமங்கள், காட்டுவளங்கள், இயற்கையாக பாயும் அருவிகள், வரலாற்றுப் பழமை வாய்ந்த குளங்கள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள், கலிங்குகள், தொங்குபாலங்கள் போன்றன அதற்குள் உள்ளடங்குகின்றன. இத்தகைய பல சிறப்பான அம்சங்களை கொண்ட இடமாகவே தேக்கம் அணைக்கட்டும் அதனைச்சூழவுள்ள பகுதியும் காணப்படுகின்றது. தேக்கம் அணைக்கட்டுப் பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்திலும் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது அடையாளம் காணப்பட்டுள்ள ஆதாரங்கள் இப்பிரதேசங்கள் சுற்றுலாவுக்குரிய இடமாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது. இன்று இலங்கையிலுள்ள தொல்லியல் திணைக்களம், கலாசார மத்திய நிதியம் மற்றும் மாவட்ட பிரதேச சபைகள் போன்றன தமது நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து, ஆராய்ந்து அதன் அம்சங்களை ஆவணப்படுத்தி அவற்றைச் சுற்றுலா மையங்களாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஒரு வரலாற்றுப் பெறுமதியுடைய மரபுரிமைக்குக் கிடைக்கும் மதிப்பானது அவற்றைப் பாதுகாக்கும் முறையிலும், அவற்றைப் பார்வையிடப் போடப்பட்டிருக்கும் நிர்வாகக் கட்டுப்பாடுகளிலும், பார்வையிட வருகின்ற பார்வையாளர்களின் எண்ணிக்கையிலுமே தங்கியுள்ளது. இதன் மூலமாகச் சாதாரண மக்களிடையே தமது மரபுரிமைகளைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு தாமாகவே அவர்களிடம் ஏற்படுகின்றதெனலாம். இவ்வாறான ஒரு பார்வையைப் பெற்ற சிறப்புமிகு இடமாகவே இத்தேக்கம் அணைக்கட்டுப் பிரதேசமும் அதனை அண்மித்த பிரதேசமும் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் மேல்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சிறந்ததொரு சுற்றுலாத்துறை மையமாக வளர்ச்சியடையச் செய்யலாம்

**1. சிறந்த தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்**

மேலும், தேக்கத்தின் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கது சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். இம்மையத்திற்கு சுற்றுலாவினை மேற்கொள்கின்ற உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் முகமாகவும் சுற்றுலாப்



ISBN 978-955-627-128-1

பயணிகள் ஓரிடத்திலிருந்து உணவருந்துவதற்கும், ஆடைகளை மாற்றுவதற்கும், தங்கி ஓய்வெடுத்துச் செல்வதற்கேற்ற வசதிகள் கொண்ட தங்கும் விடுதிகளும், பயணிகள் விரும்பிய உணவினை உண்ணுவதற்கேற்ற உணவகங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அந்த வகையில் இப்பகுதி அடர்ந்த காட்டுப் பிரதேசங்களைக் கொண்டதாகக் காணப்படுவதால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் கவரும் நுஉழ-வழரசளைஅ உழவவயபந களையும், நவீன வசதி கொண்ட ஸ்ரார் தரத்திலான ஹோட்டல்களையும், சுற்றுலா மாதிரிக் கிராமங்களையும் பாதுகாப்புடன் அமைத்தல் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற சர்வதேச தரத்திலான உணவகங்களையும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற உணவகங்களையும் இப்பிரதேசங்களை அண்டி இயற்கைச் சூழல் கெடாத வகையில் அமைத்தல் வேண்டும்.

**2. போக்குவரத்துத் துறையை விருத்தி செய்தல்.**

ஆரம்ப காலங்களில் பயணங்களுக்கு இடையூறு விளைவித்த இயற்கையான தடைகளான காலமும், தூரமும் உடைத்தெறியப்பட்டன. இதனால் போக்குவரத்து சாதனங்களின் வளர்ச்சியால் உலகமே ஒரு கைக்குள் சுருங்கியுள்ளதைக் காணலாம். அந்த வகையில் தேக்கத்தின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்குச் சிறந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கலாம். இப்பிரதேசத்திற்கு விரைவான போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு தரைவழி, விமானப் போக்குவரத்துப் பாதைகளை விருத்தி செய்தல் வேண்டும். குறிப்பாக இன்று இப்பிரதேசத்திற்கான தரைப் பாதை விரைவுப் பாதையாகக் காணப்பட்டாலும் அணைக்கட்டிற்குச் செல்லும் பாதை வாகனங்கள் செல்ல முடியாத அளவிற்குச் சேதமடைந்த கிறவல் பாதையாகவும், மழை காலங்களில் பள்ளங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் வாகனங்களைப் புதைக்குமளவிற்கு அதனது மண் தன்மை காணப்படுகிறது. இதனால், இவ்வணையை இக்காலங்களில் தரிசிப்பதற்கு பெரும் தடையாக வீதி காணப்படுகிறது. எனவே, நவீன முறையில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற வகையான வீதியைப் பிரதான வீதியிலிருந்து தேக்கம் அணைக்கட்டு வரையான வீதியை இங்கு அமைத்தல் வேண்டும். மேலும், இம்மையம் வவுனியா மற்றும் மன்னார் உள்ளூர் விமான நிலையங்களுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் இப்பிரதேசங்களிற்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கு விமானப் போக்குவரத்தினையும், நவீன வசதி கொண்ட குளிரூட்டப்பட்ட வாகனங்களையும் சுற்றுலாப் பயணிகளின் பயணத்திற்காக ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

**3. Eco-tourism ஆகவும் மாற்றுதல்.**

தேக்கம் அணைக்கட்டு பிரதேசத்தையும் அண்மைய பிரதேசத்தையும் Eco-tourism இடமாக மாற்றுவதன் மூலம் இப்பிரதேசத்தின் சுற்றுலாத் துறையை வளர்ச்சியடையச் செய்யலாம். அண்மைக் காலத்தில் உலகெங்கிலும் சுற்றுச் சூழல் சுற்றுலா மிகவும் செல்வாக்குப் பெற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக மிகக் குறைந்த வருவாயைப் பெறும் நாடுகள் இச்சுற்றுலாவை முன்னேற்றியே அதிகளவான வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்றன. இலங்கையிலே சிங்கராஜவனம் மற்றும் மத்திய மலைநாட்டுக் காடுகளிலே இத்தகைய சுற்றுலா காணப்படுகின்றது. ஆனால், வடஇலங்கையிலே இத்தேக்கம் அணைக்கட்டுப் பகுதியானது சூழல் சுற்றுலாவிற்கு ஏற்றதொரு காட்டுச் சூழலையும் பல வகையான விலங்குகளையும் கொண்டுள்ளது. அத்துடன் இம்மையம் தொல்லியல் மரபுரிமைச் சின்னத்தைக் கொண்டு தொல்லியல் சுற்றுலாவாகக் காணப்படுகிறது. ஆனால், இது சூழல் சுற்றுலாவுக்கான இயற்கையான காடுகள், பல வகையான விலங்குகள் (மான், யானை, மரை, கரடி), பறவைகள், ஆற்று நீர் வளம், அணைக்கட்டால் நீர் வழியும் போது நீர்வீழ்ச்சிகள் போல் காட்சியளிப்பது, நதிக்குக் குறுக்கே தொங்குபால அமைப்புக்கள் போன்ற பல விசேட தன்மைகளைக் கொண்டிருப்பதனால் இதனைச் சுற்றுச்சூழல் சுற்றுலாவாக மாற்றலாம். குறிப்பாக



ISBN 978-955-627-120-1

இக்காட்டுப் பிரதேசமானது பறையனாளங்குளத்திலிருந்து குஞ்சுக் குளம், செட்டிக் குளம், தந்திரி மலை என அப்படியே தொடர்ந்து செல்வதைக் காணலாம். அந்த வகையில் இவ் மையத்தை சூழல் சுற்றுலாவாக மாற்றுவதன் மூலம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான தன்மை அதிகரித்து இப்பிரதேச சுற்றுலாத் துறையானது வளர்ச்சியடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

### 4. உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

தேக்கத்தின் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு மேற்கொள்ள வேண்டிய மற்றொரு நடவடிக்கையாக விளங்குவது இப்பிரதேசங்களை அண்டி சுற்றுலாப் பயணிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். குறிப்பாக இப்பிரதேசம் காட்டுப் பிரதேசமாகவும் ஆறு மூலம் நீரைப் பெறபக்கூடியதாக இருந்தாலும் சுற்றுலாப் பயணிகள் குடிப்பதற்கான தூய குடிநீர் வசதிகளையும், அப்பிரதேசங்கள் சுற்றுலாப் பயணிகள் மலசலங்களைக் கழிப்பதற்கும், தாம் கொண்டுவரும் கழிவுப் பொருட்களைக் குறித்த ஒரு இடத்தில் வைக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட குப்பைத் தொட்டியில் போடுவதற்கான வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போது இப்பிரதேசம் மாசடையாது, அதன் பொலிவுத் தன்மை குறையாது. மேலும், பல சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடியதான தன்மையைக் கொண்டிருக்கும். குறிப்பாக இன்று தேக்கம் அணைக்கட்டுப் பகுதியிலே குஞ்சுக் குளம் தொங்குபாலம் காணப்படும் பகுதியிலே இவ் உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவேற்றப்படாத தன்மையே காணப்படுகின்றது. இவை நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதேசமாக இது மாற்றம் பெறும்.

### 5. மக்களைக் குடியேற்றுதலும் அவர்களது தேவைகளை நிறைவேற்றலும்.

இப்பிரதேசங்களில் இன்று குஞ்சுக் குளம் கிராமத்தைத் தவிர வேறு கிராமங்களில் மக்கள் குடியேற்றங்கள் இல்லையென்றே கூறலாம். இதனால் இப்பிரதேசம் ஒரு ஆட்களற்ற சூனியப் பிரதேசமாகவே காணப்படுகின்றது. இப்பிரதேசங்கள் அருவியாற்றின் இரு கரையோரங்களிலும் செழிப்பான வண்டல் மண்ணைக் கொண்டதாகக் காணப்படுகிறது. ஒரு செழிப்பான வளமான மண் காணப்படுகின்ற இடத்தில் மக்களே இல்லையென்பது கவலைக்குரியதாகும். எனவே, இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் யார்? ஆவர்கள் ஏன் இவ்விடத்தை விட்டு புலம் பெயர்ந்தார்கள்? எவ்வாறு இங்கு மீள் குடியேற்றம் செய்யலாம்? செய்வதற்கான சாதகமான காலநிலை காணப்படுகின்றதா? இங்கு சிறப்பாக விவசாயத்தை மேற்கொள்ள முடியுமா? எனப் பல கோணங்களில் ஆய்வுகளை முன்னெடுத்து இப்பிரதேசங்களில் மக்கள் வாழக்கூடிய இடங்களை அடையாளங்கண்டு அவற்றை உரியவர்களுக்கு பகிர்ந்தளித்தல் வேண்டும். அவ்விடங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுவதுடன் அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி அபிவிருத்தியான கிராமமாக முன்னேற்றி அப்பிரதேசங்களில் மக்களின் இருப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் இத்தேக்கம் பிரதேசத்தில் பல மக்கள் ஒன்று கூடும் நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் இப்பிரதேச சுற்றுலாத் துறையை வளர்க்கலாம்.

### 6. தகவல் மையங்களை உருவாக்குதல்.

அதாவது இப்பிரதேசத்திற்கான சுற்றுலா மையங்கள் தொடர்பான தகவல்களை சுற்றுலா வழிகாட்டி மூலமாகவும் ஏனைய விளம்பரங்கள் மூலம் பிரபல்யப்படுத்தல் வேண்டும். அதாவது இவ் மையம் எங்கு அமைந்துள்ளது? எவ்வாறு செல்வது? ஏன்ன அம்சங்களைக் கொண்டுள்ளது? அடிப்படை வசதிகளைக் கொண்டுள்ளதா? போன்ற வினாக்களுக்கு சிறப்பான பதில் கொண்டதான தகவல் மையங்களை உருவாக்குதல் வேண்டும். இவ் மையங்களை ஏனைய சுற்றுலா மையங்கள் காணப்படும் இடங்களிலும் இத்தேக்கம் பிரதேசத்தை மையமாகக் கொண்டும் கட்டாயமாக ஒரு தகவல் மையத்தை


ISBN 978-955-627-120-1

அமைத்தல் வேண்டும். அப்போது தான் இலகுவாக ஏனைய சுற்றுலாப் பயணிகளையும் தகவல்கள் சென்றடைந்து இச் சுற்றுலா மையம் வளர்ச்சியடையும்.

**7. பாதுகாப்பினை உறுதிப்படுத்தலும் நேரக் கட்டுப்பாடு விதித்தலும்.**

இப்பிரதேசமானது குடியேற்றமற்ற காட்டுப் பிரதேசமாகும். இக்காட்டில் யானைகள் மற்றும் கொடிய விலங்குகள் என்பவற்றின் தாக்கமும் திருடர்களின் கைவரிசையும் காணப்படலாம். எனவே இங்கு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பையும் அவர்களது நலத்தையும் பேணும் வகையில் பாதுகாப்பு வலயத்தை உருவாக்கி பாதுகாப்பு உத்தியோகத்தரை இங்கு நியமிப்பதுடன் என்னென்ன நேரங்களில் யானை மற்றும் கொடிய விலங்குகளின் நடவடிக்கையானது காணப்படுகிறது என்பதனைக் கருத்தில் கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நேரக் கட்டுப்பாட்டை விதித்தும் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும் மற்றும் இவ் மையங்களை அண்டி சுற்றுலா பொலிஸ் பாதுகாப்பை நிலைநிறுத்துவதும் இப்பிரதேசத்திற்கு சுற்றுலா வரும் பயணிகள் மனதில் பாதுகாப்பு, நம்பிக்கை ஏற்படுவதுடன் சுற்றுலாத் துறையும் வளர்ச்சியடையும்.

**8. சுற்றுலாப் பயணிகளுக்கான பயணத்தைத் திட்டமிடல்.**

அதாவது இவ் மையத்திலிருந்து இதனருகில் காணப்படுகின்ற பல மையங்களுக்கு செல்லக் கூடியதாக இருப்பதனாலும் அல்லது அம் மையங்களிலிருந்து இத்தேக்கம் பிரதேசத்திற்கு வரக்கூடியதாக இருப்பதனாலும் ஒரு சிறந்த சுற்றுலாப் பயணத் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். இவ்விடத்திலிருந்து நேரடியாக தரைவழி விரைவுப் பாதையூடாக அநுராதபுரம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு சென்றுவரக்கூடியதாகக் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி, இப்பிரதேசத்திற்கு அண்மையிலேயே பல சுற்றுலா மையங்கள் காணப்படுகின்றன. அநுராதபுர கலாசார வலயம் (73 km), தந்திரி மலை (36 km), சிலாவத்துறை முருகைக்கற்பார் (30 km), திருக்கேதீஸ்வரம் (39 km), செட்டிக்குளம் (18 km), யாழ்ப்பாணம் (141 km), மன்னார் நகரிலுள்ள சுற்றுலா மையங்கள் (43km), பெரிய புளியங்குளம் (25 km) போன்ற பல முக்கிய சுற்றுலா மையங்களை தன்னைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது. எனவே இதற்கேற்ற வகையில் சுற்றுலாத் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, அநுராதபுர நகரக் கலாசார மையங்கள் மற்றும் சிகிரியா சென்று பின்னர் அதனூடாகத் தேக்கத்தை அடைந்து அன்று இரவு மன்னார் நகரத்தில் தங்கி அடுத்த நாள் யாழ்ப்பாண நகரம் சென்று அங்குள்ள தொல்லியல் மையங்களை பார்வையிடக் கூடியதான ஒரு சுற்றுலாத் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். இதன் நோக்கம் எப்படியாவது தேக்கத்திற்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கான திட்டங்களை உள்ளடக்கியதாக சுற்றுலா திட்டமிடல் காணப்பட வேண்டும். அவ்வாறு காணப்படும் பட்சத்தில் நாளுக்கு நாள் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கலாம்.

**9. விழிப்புணர்வை ஏற்படுத்தல்.**

எந்தவொரு நடவடிக்கைகளிலுமோ அல்லது செயற்பாடுகளிலுமோ வெற்றி பெறுவதற்கு அல்லது சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு விழிப்புணர்வு என்பது முக்கியமானதொன்றாகவே காணப்படுகின்றது. எனவே தேக்கத்தின் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கும் விழிப்புணர்வு என்பது மிக முக்கியமானதாகும். அந்த வகையில் இவ் சுற்றுலா மையம் பற்றி பல உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அறியாதுள்ளதோடு அவற்றின் முக்கியத்துவத்தையும் அறியாதுள்ளனர். எனவே நேரடியாக மக்கள் மத்தியிலும் சுற்றுலாப் பயணிகள் மத்தியிலும் விழிப்புணர்வை மேற்கொள்வதுடன் பத்திரிகைகள், விளம்பரங்கள், இணையத்தளம், சமூக வலைத்தளங்கள், கருத்தரங்குகள் மூலம் தேக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பாக



ISBN 978-955-627-120-1

விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் இம் மையத்தை பார்வையிடவேண்டும் என்ற ஆவல் ஏற்படும்.

**நிறைவுரை**

இவ்வாறான வரலாற்றுச் சுவடுகளை கொண்ட இத்தேக்கம் அணைக்கட்டைச் சுற்றி பல பிரதேசங்களில் மக்கள் குடியேற்றங்கள் வன்னியர்களது ஆட்சிக்காலப்பகுதி வரை காணப்பட்டது. பின்னர் அப்பிரதேசங்களில் படிப்படியாக மக்கள் குடியிருப்பு குறைவடைந்து குஞ்சுக்குளம், பெரியமுறிப்பு கிராமங்களைத் தவிர ஏனைய கிராமங்கள் முற்றாகவே அழிந்து இன்று அடர்ந்த காட்டுப்பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. உப்பன், நவிண்டமடு, பிச்சம்பிட்டி, புளியடிஇறக்கம், பன்னவட்டுவான போன்ற கிராமங்களே இன்று முற்றாக அழிந்துள்ளன. இது தவிர தேக்கம் அணைக்கட்டுப் பிரதேசத்திலிருந்து மல்வத்து ஓயாவினது கரையோரப்பகுதிகளை அண்டி செங்கல் நாகரிகம் அப் பகுதிகளில் வாழ்ந்தமைக்கான சான்றுகள் கள ஆய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளன. அப் பிரதேசங்களாக புளியடிஇறக்கம், பன்னவட்டுவான், இராக்கிகுளம், கோட்டைக்குளம், மடுக்கரை, நீலமடு, கொக்குமடு, பவளக்காலிமடு, இராசமடு போன்ற பகுதிகளில் முன்பொரு காலத்தில் நாகரிகமான மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை ஊகிக்க முடிகின்றது.

இவ்வாறாக தேக்கம் அணைக்கட்டும் அதன் அண்மைய பிரதேசமும் மேற்குறித்த பல தொல்லியல் வரலாற்று சுவடுகளையும் ஐதீகங்களையும், நம்பிக்கைகளையும் கொண்டதாகவே காணப்படுகின்றது. ஆனால் இங்கு இன்று வரைக்கும் ஒருசில தொல்லியலாளர்கள் மேலாய்வை மேற்கொண்டு தமது அறிக்கைகளை வெளியிட்டுனரே தவிர திட்டவட்டமான தொல்லியல் அகழ்வாய்வினை ஆய்வாளர்கள் மேற்கொள்ளவில்லை. இவ்வாறான செயற்பாடனது இத்தேக்கம் அணைக்கட்டின் உண்மை வரலாறானது மக்களுக்கு தெரியாது புகைப்படர்ந்து வரலாற்றை மறைக்கும் நிலையை உருவாக்கி எமது சமூகம் இவ் அணைக்கட்டின் முக்கியத்துவம் உணரப்படாத நிலையையே தோற்றுவிக்கின்றது. எனவே ஒரு திட்டமிட்ட தொல்லியல் அகழ்வாய்வை மேற்கொள்வதன் மூலம் இவ்வணைக்கட்டு தொடர்பாக மக்கள் மத்தியில் எழுகின்ற கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும், ஐதீகங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் தீர்வை வழங்கி அதன் உண்மை வரலாற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இலங்கையின் உள்நாட்டு யுத்த காலப்பகுதியில் குறிப்பாக வட இலங்கையிலுள்ள சுற்றுலாத் தளங்கள் கவனிப்பார் அற்ற நிலையிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் மிகக் குறைவாகக் காணப்பட்டமையினால் சுற்றுலாத் துறை விருத்திக்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், 2009ம் ஆண்டுக்குப் பின்னர் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு மரபுரிமை மையங்கள் பல அடையாளம் காணப்பட்டு சுற்றுலாத் தலங்களாக மாற்றப்பட்டு வருகின்றது. இந்நடவடிக்கையின் போது ஒரு மையம் சுற்றுலாத் துறையாக வளர்ச்சியடைவதற்கு என்ன அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அத்தனை நடவடிக்கைகளும் சிறப்பான வகையில் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால், இத் தேக்கம் அணைக்கட்டுப் பகுதியில் சுற்றுலாத் துறை அபிவிருத்திக்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபராக இருந்த ரி.இராசநாயகம் அவர்களால் இப்பிரதேசத்தை சிறந்த சுற்றுலாத்தளமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் பின்னர் அது கைவிடப்பட்டு சுற்றுலாத்தளத்திற்கேற்ற சாதகமான சூழ்நிலை இல்லாத வகையிலே இன்றும் காட்சியளிக்கின்றது. எனவே தான் இவ்வணைக்கட்டு காணப்படும் பகுதியை பிரதேச செயலக அரச நிர்வாகத்தினரதும் தொல்லியல் திணைக்களத்தினரதும், வனத்துறை அதிகாரிகளினதும் உரிய அனுமதியுடன் மேலே கூறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இப்பிரதேசத்தை அபிவிருத்தியடையச் செய்யலாம். அவ்வாறு



ISBN 978-955-627-128-1

வளர்ச்சியடைவதன் மூலம் இம்மாவட்டமானது பெருமளவு வருமானத்தை சுற்றுலா மூலம் பெற்றுக்கொள்வதுடன் தமது பிரதேசத்தின் மரபுரிமையைப் பாதுகாத்துக் கொள்ளவும், பிரதேச அபிவிருத்தி ஏற்படவும், பல்லினப் பண்பாடு, மக்களின் மனம் கவரும் பிரதேசமாகவும் மாற்றிக்கொள்ள முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


Brohier.R., 1933, ancient irrigation works in Ceylon, 3 vols, Colombo.

Pusparatnam.P., 2014, Tourism and momuments of archaeological heritage in northern Srilanka, Department of History, University of Jaffna.

Paranavithana.S., 1970, Inscription of Ceylon – Early Brahmi inscription, The Department of Archaeology Ceylon, Colombo.

Sutharshan.S., 2007, "The archaeology of the megalithic Black and Red ware complex in Srilanka", The Art and archaeology of Srilanka-1, Central Cultural Fund, Colombo – 07.

லூயிஸ்.தூ்.இ 2012, இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு(2ஆம் பதிப்பு தமிழில்), வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபை, முள்ளியவளை.

சிற்றம்பலம்.சி.க., 1993, யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

செல்லத்துரை.அ., 2004, அடங்காப்பற்று(வன்னி) வரலாறு, பாகம்- 1, அருணா வெளியீட்டகம், கொழும்பு-8.

கிருஷ்ணராசா.செ., 2012, இலங்கை பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள், பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.

பத்மநாதன்.சி., 2011, யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு, குமரன் புத்தக இல்லம், சென்னை - கொழும்பு.

புஷ்பரட்ணம்.ப., 2001, பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும், கொழுப்பு தமிழச்சங்கம், கொழும்பு.

புஷ்பரட்ணம்.ப., 2003, தொல்லியல் நோக்கில் இலங்கைத்தமிழர் பண்பாடு, பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம்.

புஷ்பரட்ணம்.ப., (2015), வன்னியில் வெளிச்சத்திற்கு வராத மிகப்பிரமாண்டமான சுற்றுலாத்தலம்: *வீரகேசரி பத்திரிகை, மே-17.*

புஷ்பரட்ணம்.ப., (2015), வன்னியில் வெளிச்சத்திற்கு வராத மிகப்பிரமாண்டமான சுற்றுலாத்தலம்: *வீரகேசரி பத்திரிகை, மே-23.*

புஷ்பரட்ணம்.ப., (2013), செட்டிக்குளம் - தமிழரின் பூர்வீக வரலாற்றை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் சில தொல்லியல் சான்றுகள்: அருவிஆறு, கலாசார பேரவை, வெங்கல செட்டிக்குளம்.

பஸ்ரியம்பிள்ளை.ஜோ., (2015), தேக்கம் ஒளித்துவைத்திருக்கும் வரலாற்றுச்சுவடுகள்: *கலைக்கேசரி, vol-06, வீரகேசரி பத்திரிகை வெளியீடு.*




ISBN 978-955-627-128-1